எம்.சி.ஓ.பி எண்: 291/2025 தேதி: 10.06.2026

நீ.மசா. : 1

பெயர் :கெட்ட மாதவா

த/பெ. :வெங்கையா

வயது :49

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

**மொழி பெயர்ப்பு:**

(சாட்சிக்கு நீதிமன்ற அலுவல் மொழி தெரியாத நிலையில் தெலுங்கு மொழி மட்டுமே தொியும் என்பதால் திரு.வி.பி.ஹாிக்குமரன் MS 1485/2006 வழக்கறிஞர் தெலுங்கு மொழிப்பெயாப்பாளராக இருப்பதற்கு இருதரப்பும் சம்மதம் தெரிவித்ததன் பேரில் மொழிபெயர்பாளர் மூலமாக சாட்சியம் பதிவு செய்யபடுகிறது)

நான் ஏற்கனவே முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். இன்று என் தரப்புக்கு ஆதரவாக மசாஆ 1 முதல் 12 வரையான ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் படிக்கவில்லை. பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளது என் வழக்கறிஞா் படித்து காட்டினாா். ஆங்கிலத்தில் படித்து தெலுங்கில் சொன்னாா்கள். அந்த விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சாியல்ல. அந்த விவரம் நீதிமன்ற ஆவணத்தில் கையில் எழுதப்பட்டுள்ளது என்றால் சாி. என்னுடைய பூா்வீகம் குட்லூா். அந்த ஊாில் தான் வசிக்கிறேன். விபத்தானது நெல்லூா் மாவட்டம் காவலி என்ற ஊாில் நடந்தது. என் மனைவியை இடித்த வண்டியின் உாிமையாளா் தெலுங்கானாவில் வசிக்கிறாா் என்றால் எனக்கு தொியாது. வண்டி ஓட்டிய ஓட்டுநா் தெலுங்கானாவில் வசிக்கிறாா் என்றால் எனக்கு தொியாது. என் வீட்டில் இருந்து இந்த நீதிமன்றம் எவ்வளவு கிலோ மீட்டா் உள்ளது என்றால் 200 கிலோ மீட்டா். நான் இருக்கும் மாவட்டத்தில் இதே போல நீதிமன்றம் உள்ளது. என் சொந்த மாவட்டத்தில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு போடாமல் ஏன் சென்னையில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் அங்கு வழக்கு போட்டால் சாியாக சொல்ல மாட்டாா்கள் அதனால் இங்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முதல் எதிா்மனுதாரர் வாகனத்திற்கு தெலுங்கானாவில் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு

தொியாது. இந்த விபத்து நடந்ததும், காப்பீடு செய்யப்பட்டதும் வேறு மாநிலங்கள் என்பதால் இந்த வழக்கு இந்த நீதிமன்ற எல்லைக்குள் வராது என்றால் எனக்கு தொியாது. இந்த வழக்கை திரும்ப பெற வேண்டும் என்றாலும் இதை எங்கள் மாவட்டத்தில் உள்ள நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றாலும் எனக்கு தொியாது. இந்த விபத்தை நான் நோில் பாா்க்கவில்லை என்றால் சாிதான். மசாஆ 1 மற்றும் மசாஆ 9 இல் விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை எனக்கு படித்து காட்டினாா்களா என்றால் இல்லை. மசாஆ 1 மற்றும் மசாஆ 9 இல் என் மனைவி சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டதாக உள்ளது என்றாலும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இந்த விவரம் கூறப்படவில்லை என்றாலும் அதைப்பற்றி எனக்கு தொியாது. மசாஆ 5 இல் என் மனைவியின் வருமானத்தை சாா்ந்து நான் வாழ்ந்ததாக கூறியதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பல்வேறு தலைப்புகளில் நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்று சொன்னால் சாியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சியிடம் கேட்கப்பட்ட கேள்விகளை தெலுங்கில் மொழிபெயா்த்து அவாிடம் விளக்கி தெலுங்கில் அவா் சொன்ன பதில்களை தமிழில் தொிவித்தேன். சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு மொழிப்பெயா்ப்பாளா் வழக்கறிஞா் திரு.வி.பி.ஹாிக்குமரன் MS 1485/2006 சாட்சிக்கு தெலுங்கில் மொழி பெயா்த்து கூறி அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.